www.Padasalai.Net www.Trbtnpsc.Com

B

# KANCHIPURAM DT

## அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி | உயிரியல் | மதிப்பெண்கள் : 70

உயிரி-தாவரவியல் | மதிப்பெண்கள்: 35

### பிரிவு - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 8×1=8

1) வேரில் தழைவழி இனப்பெருக்கத்திற்கு எடுத்துக்காட்டு

அ) குர்குமாலாங்கா ஆ) டால்பர்ஜியா

இ) மியூசா பாரடிசியாகா ஈ) ஜின்ஜிஃபெர் அஃபிசினாலே

2) அராபிடாப்சிஸ்ஸில் உள்ள குரோமோசோம்களின் எண்ணிக்கை

அ) 1262 ஆ) 216 இ) 10 ஈ) 16

3) பின்வருவனவற்றுள் எது உயிரி உணர்வியில் பயன்படுத்தப்படுகிறது

அ) மின்னாற்பிரிப்பு ஆ) உயிரி உலைக்கலன்

இ) தாங்கிக் கடத்தி ஈ) மின்துளையாக்கம்

4) காலஸ் → ________ ↗ தண்டுருவாக்கம் ↘ சிறுதாவரங்கள்
↘ லேகுருவாக்கம் ↗

அ) மறுவேறுபாடுறுதல் ஆ) வேறுபாடுறுதல்

இ) முழு ஆக்குத்திறன் ஈ) வேறுபாடிழத்தல்

5) கீழ்க்கண்டவைகளில் எது படிம சுழற்சியல்ல.

அ) நைட்ரஜன் சுழற்சி ஆ) பாஸ்பரஸ் சுழற்சி

இ) சல்பர் சுழற்சி ஈ) கால்சியம் சுழற்சி

6) கனஉலோகத் தூய்மைக்கேட்டை சுட்டிக் காட்டும் தாவரம்

அ) லைக்கன்கள் ஆ) பெட்டூனியா

இ) க்ளேடியோலஸ் ஈ) ரொபீனியா சூடோஅகேசியா

7) உலகின் முதல் கலப்பினப் பருத்தியை உருவாக்கியவர்

அ) N.G.P.ராவ் ஆ) C.T.படேல்

இ) B.P.பால் ஈ) Dr. K.ராமையா

8) செயலாக்க மூலமருந்து THC எதிலுள்ளது

அ) ஜஸ்டிசியா ஆடடாதோடை ஆ) டால்பெர்ஜியா லாட்டிஃபோலியா

இ) மாரிஜீவானா ஈ) பில்லாந்தஸ் அமாரஸ்

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



## பிரிவு - II

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4×2=8

9) தன் மகரந்தச் சேர்க்கையைத் தடுக்க இருபால் மலர்கள் மேற்கொள்ளும் ஏதேனும் இரண்டு உத்திகளைப் பட்டியலிடுக.

10) முதுமரபு மீட்சி வரையறு. எ.கா. எழுதுக?

11) உயிரிவழி காற்றோட்டமளித்தல் என்றால் என்ன?

12) செயற்கை விதைகளின் ஏதேனும் இரண்டு நன்மைகளை எழுதுக.

13) கூட்டு பரிணாமம் என்றால் என்ன?

14) இந்தியாவின் பேரீச்சையின் பயன்களை எழுதுக.

## பிரிவு - III

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி
வினா எண். 19க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 3×3=9

15) வேதிச்சாயத்தை போடும் ஒருவருக்கு எரிச்சல் வருகிறது. நீங்கள் அதற்கு மாறாக எதை சிபாரிசு செய்வீர்கள். ஏன்?

16) $CO_2$ வாயு தாவரத்தின் வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கிறது என்பதை குறிப்பிடுக

17) கார்பன் கவரப்படுதல் மற்றும் சேகரித்தல் என்றால் என்ன?

18) ஒத்த சடுதிமாற்றம் மற்றும் ஒத்திலாச் சடுதிமாற்றத்தை வேறுபடுத்துக.

19) PBR322 படம் வரைந்து பாகங்களைக் குறி

## பிரிவு -IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 2×5=10

20) செயற்கை இனப்பெருக்கத்தில் பாரம்பரிய முறைகளின் நிறைகளை எழுதுக.

(அல்லது)

ஓங்கு மறைத்தலை எடுத்துக்காட்டுடன் விவரி?

21) தாவரத்திசு வளர்ப்பின் பயன்களை எழுதுக.

(அல்லது)

வேளாண் காடுகளின் நன்மைகளை எழுதுக.

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

உயிரி-விலங்கியல் மதிப்பெண்கள்: 35

பகுதி - I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினை சேர்த்து எழுதவும். 8×1=8

1) இன்ஹிபின் எனும் ஹார்மோனைச் சுரப்பது

அ) செர்டோலி செல்கள் ஆ) செவிலிச் செல்கள்

இ) விந்து உற்பத்தி செல்கள் ஈ) இவை அனைத்தும்

2) மனிதனின் ABO இரத்த வகைகளை கட்டுப்படுத்துவது

அ) பல்கூட்டு அல்லீல்கள் ஆ) கொல்லி மரபணுக்கள்

இ) பால்சார்ந்த மரபணுக்கள் ஈ) X-சார்ந்த மரபணுக்கள்

3) வளர்ப்பு ஊடகத்தில் லாக்டோஸ் இருப்பது எதைக் காட்டுகிறது

அ) லாக் y, லாக் z . லாக் a மரபணுக்கள் படியெடுத்தல் நடைபெறுதல்

ஆ) அடக்கி மரபணு, இயக்கி மரபணுவுடன் இணைய முடியாத நிலை

இ) அடக்கி மரபணு, இயக்கி மரபணுவுடன் இணையும் நிலை

ஈ) "அ" மற்றும் "ஆ" ஆகிய இரண்டு சரி

4) "வைடால் சோதனை" எந்த நோய் இருப்பதை உறுதி செய்ய முடியும்

அ) டைஃபாய்டு ஆ) காலரா

இ) டிப்தீரியா ஈ) எய்ட்ஸ்

5) இன்சுலின் இரு சங்கிலிகளிலும் எத்தனை அமினோ அமிலங்கள் அமைந்துள்ளன

அ) A சங்கிலியில் 12 மற்றும் B சங்கிலியில் 13 அமினோ அமிலங்கள்

ஆ) A சங்கிலியில் 21 மற்றும் B சங்கிலியில் 30 அமினோ அமிலங்கள்

இ) A சங்கிலியில் 12 மற்றும் B சங்கிலியில் 30 அமினோ அமிலங்கள்

ஈ) A சங்கிலியில் 12 மற்றும் B சங்கிலியில் 20 அமினோ அமிலங்கள்

6) வேட்டையாடுதல் மற்றும் ஒட்டுண்ணி வாழ்க்கை முறை எந்த வகை உயிரினச் சார்பு?

அ) (+, +) ஆ) (+, 0) இ) (–, –) ஈ) (+, –)

7) உயிரினங்களின் சிவப்பு பட்டியலை வெளியிட்டுள்ள நிறுவனம்

அ) WWF ஆ) IUCN இ) ZSI ஈ) UNEP

8) புகைப்பனி எதிலிருந்து பெறப்படுகிறது

அ) புகை ஆ) மூடுபனி இ) அ மற்றும் ஆ ஈ) அ மட்டும்

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com




## பகுதி - II

**II. குறிப்பு: எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். 4×2=8**

9) இரு சமப்பிளவு முறையின் வகைகள் யாவை? எ.கா. தருக.

10) கருக்கொலை (ம) சிசுக்கொலை வேறுபடுத்துக.

11) கீழ்கண்ட படியெடுத்தல் அலகில் A மற்றும் B எனக் குறிப்பிட்டுள்ளவற்றை எழுதுக.




12) மூன்று வகை புதைபடிவமாக்கல் வகைகள் யாவை?

13) குறிப்பு வரைக - ஈனாலஜி

14) குளிர் உறக்கம் (ம) கோடை உறக்கம் ஆகிய நிகழ்வுகளை எ.கா. தருக.

## பகுதி - III

**III. குறிப்பு: எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண். 19க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 3×3=9**

15) முதிர்ந்த விந்தணுவின் படம் வரைந்து பாகங்களைக் குறி

16) பல்கூட்டு அல்லீல்கள் என்றால் என்ன?

17) லாமார்க்கின் பெறப்பட்ட பண்புக் கோட்பாட்டினை தவறென நிரூபித்தவர் யார்? எவ்வாறு நிரூபித்தார்?

18) rDNA தொழில்நுட்ப வருகைக்கு முன் இன்சுலின் எவ்வாறு பெறப்பட்டது? எத்தகைய பிரச்சனைகள் எதிர்கொள்ளப்பட்டன?

19) மாசுபாடு கட்டுப்படுத்துவதில் "4R" பற்றி குறிப்பு வரைக.

## பகுதி - IV

**IV. குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 2×5=10**

20) உடல்வெளிக் கருவுறுதல் (அ) சோதனைக் குழாய் குழந்தை பற்றி விளக்குக?

**(அல்லது)**

முதன்முதலாக உருவான மரபுபொருள் ஆர்.என்.ஏ தான் என நிரூபிக்கப்பட்டுள்ளது. காரணங்களுடன் நிரூபிக்க.

21) இம்யுனோகுளோபுலினின் அமைப்பை தகுந்த படத்துடன் விளக்கு.

**(அல்லது)**

மனித செயல்பாடுகளால் உயிரியப் பல்வகைத்தன்மைக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் யாவை? விளக்கு.

****/****

www.Padasalai.Net

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com